ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1774/36 - 2012 සැප්තැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2012.09.07
*1774/36 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 4/96.*

**1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டம்**

*1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் 8 (இ) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆவது பிரிவின் கீழ் கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

டாக்டர் ராஜித சேனாரத்ன,
கடற்றொழில், நீர்வாழ் உயிரின வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2012, ஓகத்து

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம்) கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தில் சிப்பி அல்லது சிங்கி இறால் பிடித்தலுக்கான மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. 2010 ஆம் ஆண்டின் ஓகத்து மாதம் 4 ஆந் திகதிய 1665/81 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம்) கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தில் சிப்பி அல்லது சிங்கி இறால் பிடிப்பதற்கு மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற உரிமம் வைத்திருப்பவர் ஒருவருக்கும் இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

3. 1996 ஆம் ஆண்டின் நவெம்பர் 7 ஆந் திகதிய 948/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மீன்பிடித் தொழிற்பாட்டு ஒழுங்குவிதியில் எதுஎவ்வாறிருப்பினும் அதற்கு காரணம் முரணாகாத வகையில் தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம் ) கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தில் சிப்பி அல்லது சிங்கி இறால் பிடிப்பதற்கு ஏதேனும் மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுகின்ற உரிமம் வைத்திருக்கும் ஆளெவரும் அத்தகைய உரிமம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தில் "தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம்) கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசத்தில் சிப்பி அல்லது சிங்கி இறால் பிடித்தல் வலிதானது" எனப் பயனுறும் வகையில் புறக்குறிப்பிடப்பட்டிருந்தாலன்றி ஈடுபடுதலாகாது.

4. மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமம் எதுவும் -

(அ) அத்தகைய உரிமத்தை வைத்திருப்பவர் பதிவு செய்யப்பட்டவொரு உறுப்பினராகவுள்ளவிடத்து கடற்றொழில் குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரையின் மீதன்றி வழங்கப்படுதல் அல்லது மீளப்புதுப்பிக்கப்படுதலாகாது ; அல்லது

(ஆ) வேறு எவரேனும் ஆளுக்கு கைமாற்றப்படுதல் அல்லது விற்கப்படுதலாகாது.

ஆயின், எவ்வாறாயினும் அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் நிரந்தர இயலாமை அல்லது இறப்பின் போது கடற்றொலில் குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரைகளின் மீது பணிப்பாளர் தலைமையதிபதி அத்தகைய உரிமத்தை வைத்திருப்பவரின் குடும்பத்தின் உறுப்பினரொருவருக்கு கைமாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

5. பணிப்பாளர் தலைமையதிபதி தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம் ) கடற்றொழில் முகாமைத்துவத் திட்டத்தின் மீளாய்வின்மீது வழங்கப்படும் உரிமங்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம்.

6. எவரேனுமாள் சிப்பி மற்றும் சிங்கி இறால் பிடிப்பதற்காக தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கு விரும்புகின்றவிடத்து ஒவ்வொரு வகைக்கும் வேறுவேறான மீன்பிடித் தொழிற்பாட்டு உரிமங்களைக் கொண்டிருக்கத் தேவைப்படுத்தப்படுகின்றார்கள்.

7. மீன்பிடித் தொழிற்பாட்டில் ஈடுபடாத உரிமம் வைத்திருப்பவருக்கு வழங்கப்பட்ட உரிமமானது கடற்றொழில் குழுவினால் ஆக்கப்பட்ட பரிந்துரையின் மீதன்றி பணிப்பாளர் தலைமையதிபதியால் மீளப் புதுப்பிக்கப்படுதலாகாது.

8. (அ) உரிமம் வைத்திருப்பவர் ஒவ்வொருவரும் கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தரவுப் புத்தகங்களில் அத்தகைய தொழிற்பாடு ஒவ்வொன்றிலும் பிடிக்கின்ற அளவுகள் உள்ளடங்கலான சிப்பி அல்லது சிங்கி இறால் பிடிப்பது தொடர்பிலான பதிவுகளைப் பேணுதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) பணிப்பாளர் தலைமையதிபதி சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் ஒவ்வொரு மாத இறுதியிலும் தரவுத் தாள்களை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு உரிமம் வைத்திருப்பவரும் மீன்பிடித்தொழிற்பாட்டு உரிமம் மீளப்புதுப்பிக்கப்படும் நேரத்தில் பூரணப்படுத்தப்பட்ட தரவுப் புத்தகங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

9. சிப்பி அல்லது சிங்கி இறால் பிடிப்பதற்கு வள்ளத்தில் இருக்கவேண்டிய கடலடியில் விரிக்கும் கரமல் வலைத் தொகுதிகள் பின்வருமாறு :-

(அ) இயந்திரம் பொருத்தப்படாத பாரம்பரிய படகொன்றில் (NTRB) இருக்கவேண்டிய ஆகக்கூடிய வலைகளின் எண்ணிக்கை இருபது (20) ஆகும் ; அத்துடன்

(ஆ) இயந்திரம் பொருத்திய பாரம்பரிய படகு (MTRB) மற்றும் வெளியணை இயந்திரம் பொருத்திய பைபர் கிளாஸ் படகொன்றில் (OFRD) இருக்கவேண்டிய ஆகக்கூடிய வலைகளின் எண்ணிக்கை இருபத்தைந்து (25) ஆகும்.

10. உரிமம் வைத்திருப்பவர்கள் :-

(அ) தெற்கு கரையோர(அம்பாந்தோட்டை மாவட்டம் ) கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தில் சிங்கி இறாலைப் பிடிக்க நீர்முழ்குதலைப் பயன்படுத்தல் மூலம் ; அத்துடன்

(ஆ) தெற்குக் கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம் ) கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தில் சிப்பியை பிடிக்க மு. ப. 6.00 மணியிலிருந்து பி. ப. 6.00 மணிவரை மீன்பிடித் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளில் –

| | | |
|---|---|---|
| "பணிப்பாளர் தலைமையதிபதி" | - | என்பது 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தலைமையபதிபதி எனப் பொருள்படும். |
| "கடற்றொழிற் குழு" | - | என்பது தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம் ) கடற்றொழில் முகாமைத்துவப் பிரதேசத்தில் சிப்பி அல்லது சிங்கி இறாலைப் பிடிக்கும் நோக்கங்களுக்காக 1997 ஆம் ஆண்டு, ஏப்பிறல் 25 ஆந் திகதிய 972/15 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் சட்டத்தின் பிரிவு 32 இன் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்டதுமான குழு எனப் பொருள்படும். |
| "உரிமம் வைத்திருப்பவர்" | - | என்பது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட மீன்பிடித் தொழிற்பாட்டில் ஈடுபடுவதற்கு மீன்பிடித் தொழிற்பாடு உரிமம் யாருக்கு வழங்கப்பட்டதோ அவ்வாள் எனப் பொருள்படும். |

"அவரின்குடும்ப உறுப்பினர்" என்பது ஆள் தொடர்பானவிடத்து -

(i) அவரின் உயிர்வாழ்கின்ற வாழ்க்கைத்துணை ; அல்லது

(ii) அத்தகைய உயிர்வாழ்கின்ற வாழ்க்கைத்துணை இல்லாத விடத்து பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அவருடைய மகன் அல்லது மகள்; அல்லது

(iii) அவ்வாளின் அத்தகைய உயிர்வாழ்கின்ற வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் இல்லாதவிடத்து அவருடைய உயிர் வாழ்கின்ற பெற்றோர் ஒருவர்; அல்லது

(iv) அத்தகைய உயிர்வாழ்கின்ற வாழ்க்கைத்துணை, மகன் அல்லது மகள் அல்லது அவருடைய உயிர் வாழ்கின்ற பெற்றோர் ஒருவர் இல்லாதவிடத்து அவருடைய பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட சகோதரர் அல்லது சகோதரி எனப் பொருள்படும்.

"தெற்கு கரையோர (அம்பாந்தோட்டை மாவட்டம்கடற்றொழில் முகாமைத்துவ பிரதேசம்" என்பது 2010 ஆம் ஆண்டின் ஓகத்து 4 ஆந் திகதிய 1665/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதேசம் எனப் பொருள்படும்.

9-704